## ‘மெயில்’ ஏட்டுக்கு மறுப்பு

“மெயில்” பத்திரிகையின் ஆசிரியருக்கு திருமதி ஈ.வெ.ரா. மணியம்மையார் எழுதியனுப்பியுள்ள ஆங்கில மறுப்புக் கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு வருமாறு:-

அய்யா! தங்களுடைய மதுரை நிருபர் 25-5-1958 அன்று மதுரையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில் ஒரு தீர்மானத்தைக் குறித்து அனுப்பியுள்ள செய்தி தவறானது என வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரும் ஜூன் 30ஆம் தேதி பெரியார் அவர்கள் “விடுதலை”யை வற்புறுத்தி பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேறியதாக உங்களுடைய நிருபர் செய்தியறிவித்துள்ளார். அதுபோல ஒரு தீர்மானமும் நிறைவேறவில்லை.

“அங்கு நிறைவேறிய தீர்மானம் பெரியார் அடுத்த ஜூன் 13ஆம் தேதி சிறையிலிருந்து விடுதலையடையும் நாளை தமிழர் மகிழ்ச்சி நாளாக நினைத்து, கழகத்தாரும் பொதுமக்களும் பெரியார் பட ஊர்வலம், கொடி ஏற்றம் முதலியன சிறப்பாகச் செய்து கொண்டாட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது” என்பதே.

அவர் செய்தியில் குறிப்பிட்டிருந்தபடி பெரியார் அவர்கள் “விடுதலை”யில் வற்புறுத்தும்படி மக்களைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தயவு செய்து இத் திருத்தத்தை தங்கள் பத்திரிகையில் வெளியிட்டு உதவவும்.

- *“விடுதலை” (28.5.958)*